[2014 ஜூலை 15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

சொந்தக் கட்டடம்

*__6726__—**திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, அம்பத்தூர் கிராம நிருவாக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி; கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல்; காடும் காடுசார்ந்த இடமும் முல்லை; வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம்; மணலும் மணல்சார்ந்த இடமும் பாலை. அந்த வரிசையில் இன்றைக்கு "அமைதியும், வளமும், வளர்ச்சியும் சார்ந்த இடம் தமிழகம்" என்று தரணியெங்கும் உச்சரிக்கச் செய்திட்ட (மேசையைத் தட்டும் ஒலி) தலைமைப் பண்புகளின் உறைவிடமே! தன்னலமற்றத் தொண்டின் பிறப்பிடமே! மனிதகுலம் காத்திட தன்னையே அர்ப்பணித்து அரும்பணியாற்றி வருகின்ற தியாக தீபமே! தெய்வத் திருமகளே! அம்மா,* for the people, by the people, of the people *மக்களுக்காக, மக்களால், மக்களுடைய என்ற ஆப்ரகாம் லிங்கனுடைய கூற்றுக்கு உயிர் கொடுக்கின்ற வகையில், உலகத்தில் இதுவரை யாரும் சிந்தித்திடாத, செயல்படுத்திடாத, மக்கள் நலன் காக்கும் அற்புதத் திட்டங்களை அள்ளி, அள்ளிக் கொடுத்து, அன்னைத் தமிழகத்தை அகிலத்தில் முதன்மை மாநிலமாக வழிநடத்தி வருகின்ற புனிதத் தலைமையே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசியல் வரலாற்றில் இதுவரை யாரும் பெற்றிராத இமாலய வெற்றியை தனி மனித இராணுவமாய் கழகத்திற்குப் பெற்றுத் தந்து,*

2014 ஜூலை 15]

இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் ஈடு இணையற்ற பேரியக்கமாகக் கழகத்தை வழிநடத்தி வருகின்ற புறநானூற்றுத் தாயே! புவி ஆளப் பிறந்தவரே! குன்றாப் புகழ்கொண்ட குலமே! வெற்றியின் விலாசமே! அம்மா, இவ்வையகத்தில் இதுவரையில் சொல்லப்பட்டுவந்த வேதம் நான்கு. அதாவது, ரிக், யஜூர், சாமம், அதர்வணம். ஆனால், இன்றைக்கு அகிலமே உச்சரிக்கின்ற ஒரே வேதம் 'அம்மா' என்னும் அன்பு வேதம். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்னும் அன்பு வேதத்தை என் சுவாசமாகக் கொண்டு, கடைக்கோடியில் கழகப் பணியாற்றிவந்த எனக்கு, கழகத்தின் பல்வேறு நிலைகளிலே கழகப் பணியாற்றிட வரலாற்று வாய்ப்பினை வழங்கி, கருணை செய்து, இன்றைக்கு வருவாய்த் துறையின்மூலம் மக்கள் பணியாற்றுகின்ற பொன்னான வாய்ப்பினை தாயுள்ளத்தோடு வழங்கி, அருளாசி புரிந்திட்ட தமிழினம் காத்து நிற்கும் தமிழர்குல சாமியே, தங்களின் திருவடிகளைப் பணிந்து வணங்கி, கோடானுகோடி நன்றிகளை விசுவாசத்துடன் காணிக்கையாக்கி, எனது பதிலினை திருத்திய பதிலாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் பல்வேறு இடங்களில் 114 கிராம நிருவாக அலுவலர்களுக்குக் குடியிருப்புடன்கூடிய கிராம நிருவாக அலுவலகம் கட்டப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து அரசாணை நிலை எண். 476 வருவாய் நாள் 27-11-2013-ல் 8 மாவட்டங்களில் உள்ள 114 கிராமங்களில் குடியிருப்புகளுடன்கூடிய கிராம நிருவாக அலுவலகம் கட்டுவதற்குத் தலா ரூ.6.95 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.7,92,34,300 நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டு, கிராம நிருவாக அலுவலகங்களுக்கான கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-50

இவற்றுள் அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட திருமுல்லைவாயில்-1, திருமுல்லைவாயில்-2, பாடி மற்றும் கொரட்டூர் ஆகிய இடங்களும் அடங்கும். இவை தவிர அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட இதர 4 கிராம நிருவாக அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன.

மேலும், முன் எப்போதும் இல்லாத நிகழ்வாக, வருவாய்த் துறையின் பணியாளர்களின் பணி நிலையை மேம்படுத்தவும், அவர்களுடைய செயல்திறனை மேம்படுத்துவதற்கான சூழ்நிலையை உண்டாக்கவும், அவர்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் புனித அரசு முழு அக்கறை கொண்டு, இந்தியத் திருநாட்டில் முதன்மையான அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.*

திரு. எஸ். வேதாச்சலம்: *மாண்புமிகு தங்கத் தாரகை, எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொகுதி மக்களுக்கு கிராம நிருவாக அலுவலகம் வேண்டுமென்று கேள்வியை வைக்கும் முன்னே, அலுவலகம் கட்டித் தருகிறேன் என்று அம்பத்தூர் தொகுதி மக்களுக்கு உத்தரவு தந்த எங்கள் குடும்ப குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், இதனை வெற்றியோடு சிறப்பாகச் செய்து தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா. நன்றி,*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடத்திலும், போக்குவரத்து நெருக்கடி உள்ள இடத்திலும் செயல்பட்டு வந்த வட்டாட்சியர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதன்பேரில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், அதற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ. 2 கோடியே 2 இலட்சம் ஒதுக்கித் தந்தமைக்காக உசிலம்பட்டி தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத்*

2014 ஜூலை 15]

தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புதிய கட்டடம் கட்டும் பணி எப்போது துவங்கும் என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள 284 வட்டாட்சியர் அலுவலகங்களில், 208 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசின் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட 34 வட்டாட்சியர் அலுவலகங்கள் உட்பட 42 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளவற்றில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட உசிலம்பட்டி தொகுதியில் செயல்படும் வட்டாட்சியர் அலுவலகமும் ஒன்று. ஆகவே, அவற்றிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். இராஜி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

146—

கிளை நூலகம்

***35956**—திரு. வி.எஸ். இராஜி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, பவுஞ்சூரில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, பவுஞ்சூரில் பகுதி நேர நூலகம் திறப்பதற்கு இலவசமாக இட வசதி மற்றும் உரிய